1981 பிப்ரவரி 2]

தான் இதுவரை பாதிக்கப்பட்ட பகுதிகள் எல்லாம் பயன் பெறும் என்ற அடிப்படையில் அரசு தீவிரமாக முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றது. இதன் காலதாமதத்தை மத்திய அரசும் உணர்ந்து இருக்கின்றது. எனவே 1981—ஆம் ஆண்டு முடிக்கப்படவேண்டிய வைகைப் பெரியாறு கால்வாய்த் திட்டம் 1984—ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டிருக்கின்றது. 72 கோடி ரூபாய் செலவிலே இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல்—10 00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

பவானிசாகர் அணையைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு பாசன வசதி

*வினா எண். 156—**திரு. கே. ஜி. சுப்பிரமணியன்**: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் அணைக்கட்டு சுற்றுப்புறத்தில் சுமார் 7 பஞ்சாயத்துக்கள் அடங்கிய நிலப்பரப்பில் குளத்துப்பாசனம் செய்வதற்குரிய அளவு அணையில் தண்ணீர் விட திட்டம் ஏதும் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) இல்லை. (ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. கா. நல்லப்பன்: பவானிசாகர் வாய்க்காலிலிருந்து பெற்றிக்குட்டையிலிருந்து கிரேன்நகர், விஜயமங்கலம் வழியாக ஊத்துக்குடிக்கு நொய்யாற்றிலிருந்து வருகிற தண்ணீரைக் கொண்டு அங்குள்ள குளம் குட்டைகளுக்கு தண்ணீர் அளிக்கும் வகையில் ஒரு திட்டம் அரசினிடம் இருக்கிறதா? ஏற்கனவே இது சம்பந்தமாக அரசுக்கு ஏதாவது மனு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மூலக் கேள்வி பவானிசாகர் அணைக்கட்டு சுற்றுப்புறத்தில் சுமார் 7 பஞ்சாயத்துக்கள் அடங்கிய நிலப்பரப்பில் குளத்துப் பாசனம் செய்வதற்குறிய அளவு அணையில் தண்ணீர் விடத் திட்டம் ஏதாவது உண்டா என்பதாகும்.

அந்தப் பஞ்சாயத்துக்களின் பெயர்களைச் சொல்லாமல் ஏழு பஞ்சாயத்துக்கள் என்று எந்தப் பஞ்சாயத்தின் பெயரையும் சொல்லாமல் கேட்டிருப்பதால் பதில் தெளிவாகச் சொல்லமுடியவில்லை. ஆனால் இப்போது விளக்கமாக பெயர்களைச் சொல்லிக் கேட்கிறார்கள் தனிக்கேள்வி கேட்டால் அது குறித்து விரிவான பதில் தரப்படும்.

அனந்தநாறு கால்வாய் லைனிங் திட்டம்

*வினா எண். 157— திரு. மி. வின்செண்ட்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவிலில் ஓடும் அனந்தநாறு (Lining Scheme) திட்டம் என்ன நிலையில் உள்ளது?

(ஆ) ஒதுக்கப்பட்டுள்ள பணம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :

(அ) மற்றும் (ஆ): ரூ 246 இலட்சத்தில், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனந்தனாறு கால்வாய் மற்றும் அதன் கிளைக் கால்வாய்களை சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மி. வின்செண்ட் : இந்தத் திட்டம் மூலம் எவ்வளவு ஏக்கர்கள் அதிகப்படியாக சாகுபடியாகிறது?, எவ்வளவு டன் உற்பத்தி அதிகரிக்கிறது என்பதைத் தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் 3,600 ஏக்கர் இருபோக நன்செய் நிலங்களுக்கு பாசனவசதி உறுதிப்படுத்தவும் 2,300 ஏக்கர் இருபோக நன்செய் நிலங்களின் பாசனப் பற்றாக்குறையைப் போக்கவும் வகை செய்யப்படுகிறது

திரு. மி. வின்செண்ட்: இத்திட்டத்தைத் துவக்க ஆணை பிறப்பிக்கப்பட்டு விட்டதா? இதன் பெயரே அனந்தநாறுத் திட்டம். நாகர்கோவில் மக்கள் ஆனந்தமாக கொண்டாடுவதற்கு இந்தத் திட்டத்தை இந்தச் சட்டமன்றக் கூட்டம் முடிந்தவுடனே ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இது ஒரு பயனுள்ள திட்டம் என்று அரசு கருதுகிறது. உணவு உற்பத்தியும் கிட்டதட்ட ஆண்டு ஒன்றுக்கு 7,080 டன் கூடுதலாகக் கிடைக்கும் என்ற காரணத்தால் நிச்சயமாக தைப்பொங்கல் கொண்டாடுவது போல் ஆனந்தமாகக் கொண்டாடுவதற்கு அரசுக்கு ஆட்சேபணையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.